# திருவிவிலியத்தினுடைய பழைய ஏற்பாட்டு நூல்களில் மிளிர்கின்ற முகாமைத்துவப் பண்புகள்

**ஹேரோசினி, யே**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

---

நிறுவனத்தின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு சமூகச் செயற்பாடாக முகாமைத்துவம் திகழ்கின்றது. முகாமைத்துவம் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், ஒருங்கிணைத்தல் போன்ற நடவடிக்கையினை உள்ளடக்கியதாக உள்ளது. முகாமையாளர் தனது நிறுவனத்தினுடைய இலக்கினை நல்ல முறையில் செம்மைப்படுத்துவதற்கான வழிகாட்டியாக பழைய ஏற்பாட்டு நூல்கள் அமைந்திருக்கின்றன. பழைய ஏற்பாட்டு நூல்களில் பல்வேறுபட்ட முகாமைத்துவப் பண்புகள் பிரதிபலிக்கின்றன. சூழலுக்கேற்ப தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல், நீதியுணர்வு, பரிந்துரைத்தல், சவால்களை முறியடித்தல், பணிகளைப் பகிர்தல், பொறுப்புக்களை ஒதுக்கீடு செய்தல், ஒற்றுமை, குழு மனப்பான்மை, வழிநடத்தல், பிறருடைய கருத்திற்கு மதிப்பளித்தல், பாராட்டுதல், ஆலோசனை வழங்குதல், தனிப்பட்ட நலன்கள், அறிவுறுத்துதல், கட்டுப்படுத்துதல், பலம், நெறிப்படுத்தல், பேச்சுத் திறன், கடமை உணர்வு, தொடர்பாடல் திறன் போன்ற பண்புகள் பழைய ஏற்பாட்டு நூல்களில் காணப்படுகின்றன. இவ்வாறான பண்புகள் பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்களை வழிநடத்திய ஆன்மீக தலைவர்களிடம் மேலோங்கி காணப்பட்டன. எனவே பழைய ஏற்பாட்டு நூல்களின் பின்னணியில் முகாமைத்துவப் பண்புகளை இனங்காணல். சமகால சூழலில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முகாமைத்துவப் பண்புகளை ஒப்பிட்டு, மதிப்பீடு செய்தல் போன்றன ஆய்வின் நோக்கங்களாக அமைந்திருக்கின்றன. இவ் ஆய்வில் இரண்டு கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டு நூல்கள் முகாமைத்துவப் பண்புகளை மையப்படுத்தியுள்ளன. பழைய ஏற்பாட்டு நூல்களானது முகாமையாளர் நிறுவனத்தினை வழிநடத்திச் செல்வதற்கான முகாமைத்துவப் பண்புகளை எடுத்துரைக்கின்ற வழிகாட்டியாகத் திகழ்கின்றன. சமகாலத்தில் சில முகாமையாளர்களிடம் பிரதிபலிக்கக் கூடிய முகாமைத்துவப் பண்புகள் தொடர்பான விழிப்புணர்வு குறைவடைந்து வருகின்றன. பழைய ஏற்பாட்டு நூல்களில் உள்ள முகாமைத்துவப் பண்புகளை முகாமையாளர் கடைப்பிடிப்பதன் மூலமாக நிறுவனமானது தனது இலக்கினை அடையக் கூடிய சூழல் உருவாகின்றது.

**திறவுச்சொற்கள்:** *நிறுவனம்; முகாமைத்துவப் பண்புகள்; திருவிவிலியம்; பழைய ஏற்பாட்டு நூல்கள்; முகாமையாளர்கள்*

---